**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .365/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-1/PW-1 <br> Name : லோகநாதன் <br> Father's/Husband's Name : ராஜமாணிக்கம் <br><br> Nationality : Indian | Village: <br> Age :59 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது கடிச்சம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூடை பின்னும் தொழில் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன மங்களம் எனது சித்தி ஆவார். கடந்த 18.01.2015 ம் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் நானும் எனது சித்தியும் மேல அம்மாசத்திரம் கடைதெருவிற்கு சென்று பொருட்கள் வாங்கிவிட்டு நான் வெற்றிலை வாங்கி வருவதாக சொல்லி எனது சித்தியை அனுப்பி வைத்தேன். மேல

அம்மாசத்திரத்தில் திருவிடைமருதூர் - கும்பகோணம் செல்லும் ரோட்டில் உள்ள முனியாண்டி ஹோட்டல் அருகே எனது சித்தி முன்னால் சென்று கொண்டிருந்தார். நான் வெற்றிலை வாங்கிவிட்டு அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன். அப்போது பின்னால் இருசக்கர வாகனத்தை கலியமூர்த்தி என்பவர் அதிவேகமாக ஓட்டி வந்து எனது சித்தி மங்களம் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதனால் மங்களம் அங்கேயே கீழே விழுந்து அவர் தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது. அடிபட்ட அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்த எனது சித்தி சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் இறந்துவிட்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க எதிரியை அடையாளம் காட்டுவதற்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**